**கொபய்கனே பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 18 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 12 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கொபய்கனே பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் உருவாக்கப்பட்ட வருமானமொன்றல்லாத ரூபா 7,193,372 ஆன முத்திரைக் கட்டண வருமானம் உழைத்த வருமான மூலமொன்றாக சேவைகள் கட்டணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 27,046,083 ஆன 5 இயந்திரங்களின் பெறுமதி மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வாடகை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 2,119,895 ஆன வாரச்சந்தை வருமானம் ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,593,329 ஆக இருந்த பொதிலும் கணக்கின் பிரகாரம் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,509,863 ஆக இருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 83,466 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ரூபா 3,869,100 ஆன சம்பள மீள்நிரப்பல் ரூபா 2,566,019 என காண்பிக்கப்பட்டதன் பேரில் ஆண்டின் வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 1,303,081 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) உள்ளுராட்சி ஓய்வுதிய விதவை தபுதார் ஓய்வூதிய பங்களிப்பிற்காக ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்ட பணம் சம்பள மீள்நிரப்பல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கழிக்கப்பட்ட ரூபா 106,383 ஆன பணம் சம்பளம் மற்றும் படிகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதன் பேரில் உரிய செலவினம் மற்றும் சம்பள மீள் நிரப்பல் வருமானம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 1,173,869 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,663,253 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 6,250,382 மீதிக்கு காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 174,566 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய மீதிகளாக இருந்தன.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,663,253 தொகையில் 31 சதவீதம் அதாவது ரூபா 4,975,450 தொகை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்களாக இருந்ததுடன், 20 சதவீதம் அதாவது ரூபா 3,202,285 ஆன நிர்மாணக் கடன்பட்டோராக இருந்தன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,048,130 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 2,323,639 ஆன மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 1,883,697 ஆன மீதிகள் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்பட வேண்டிய மீதிகளாக இருந்தன.

(ii) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 14,048,130 தொகையில் 68 சதவீதம் அதாவது ரூபா 9,538,529 தொகை நிர்மாணக் கடன்கொடுத்தோராக இருந்ததுடன் ரூபா 475,257 தொகை உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதிகளாக இருந்தன.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 17,180,252 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் உருவான முறை காண்பிக்கப்படும் பதிவேடொன்று / அட்டவணையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அக்கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

மீளாய்வாண்டின் போது மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் மற்றும் கிரிக்கட உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் பொருட்டு ரூபா 70,185 மற்றும் உலக சிறுவர் தின நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக வளவாளர் கொடுப்பனவாக ரூபா 10,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,177,503 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 925,430 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 7,252,073 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 109,556,264 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 114,268,450 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,465,317 ஆன மிகையாக மாறியிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 10,568 | 4,978 | 5,590 | தனிப்பட்ட வேதனம் | 26,887 | 20,211 | 6,676 |
| (ii) | ஏனையவை | 36,798 | 30,335 | 6,463 | ஏனையவை | 12,302 | 14,176 | (1,874) |
| | உப மொத்தம் | 47,366 | 35,313 | 12,053 | உப மொத்தம் | 39,189 | 34,387 | 4,802 |
| (iii) | மூலதன வருமானம் | 109,556 | 25,140 | 84,416 | மூலதன செலவினம் | 114,268 | 25,386 | 88,882 |
| | மொத்தம் | 156,922 | 60,453 | 96,469 | மொத்தம் | 153,457 | 59,773 | 93,684 |
| | செயற்பாட்டு விளைவு | 8,177 | 925 | 7,252 | மிகை / பற்றாக்குறை | 3,465 | 679 | 2,786 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 47,366,529 தொதையில் 77 சதவீதமான அதாவது ரூபா 36,798,969 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளுடன் கூடியது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 109,556,264 தொகையில் 95 சதவீதமான அதாவது ரூபா 104,423,760 தொகை நன்கொடையாக கிடைத்த வாகனங்களின் பெறுமதி மற்றும் தேசத்திற்கு மகுடம் போன்ற நிதிஏற்பாடுகளை கொண்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 39,189,026 தொகையில் 68 சதவீதமான ரூபா 26,887,257 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவினங்களாகக் காணப்பட்டதுடன் அவற்றில் மொத்தமாக 90 சதவீதமான அதாவது ரூபா 24,384,970 தொகை உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட சம்பள மீளளிப்பாகும். அப்பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதன செலவினமான ரூபா 114,268,450 தொகையில் 91 சதவீதம் அதாவது ரூபா 104,423,760 தொகை நன்கொடையாக கிடைத்த வாகனங்களின் பெறுமதி மற்றும் தேசத்திற்கு மகுடம் போன்ற நிதிஏற்பாடுகளை கொண்டிருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 1,259 | 1,055 | 377 | 1,504 | 1,062 | 355 |
| (ii) குத்தகை வாடகை | 1,184 | 1,203 | 23 | 1,584 | 787 | 251 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 644 | 487 | - | 640 | 624 | 209 |
| (iv) ஏனைய வருமானம் | 32,854 | 44,622 | 11,417 | 25,873 | 32,840 | 9,080 |
| மொத்தம் | 35,941 | 47,367 | 11,817 | 29,601 | 35,313 | 9,895 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு | | | நிலுவை மீதி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 355 | 1,055 | 1,410 | 103 | 930 | 1,033 | 252 | 125 | 377 |
| வாடகை | 251 | 1,203 | 1,454 | 235* | 1,196 | 1,431 | 16 | 07 | 23 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 209 | 487 | 696 | 209* | 487 | 696 | - | - | - |
| ஏனைய வருமானம் | 9,080 | 44,622 | 53,702 | 9,080 | 33,205 | 42,285 | - | 11,417 | 11,417 |
| | 9,895 | 47,367 | 57,262 | 9,627 | 35,818 | 45,445 | 268 | 11,549 | 11,817 |

* 2015 சனவரி 01 இல் காணப்பட்ட வாடகை நிலுவையிலிருந்து ரூபா 209,623 தொகையும் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்களிலிருந்து ரூபா 209,095 தொகையும் நாட்குறிப்பு பதிவுகள் மூலம் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.3.3 குத்தகை வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது தேசத்திற்கு மகுடத்தின் மூலம் கொபைஹேன பஸ் நிறுத்தும் நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 8 ‘ 8 அளவிலான இரண்டு கடைகள் கேள்வி மூலம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்க சபை தீர்மானித்திருந்த போதிலும், ஒரு கடை கேள்வி நடைமுறையிலிருந்து விலகி 2015 சனவரி முதல் வெளித்தரப்பினருக்கு ரூபா 2,500 ஆன மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கடை வாடகை கொடுப்பனவு தொடர்பாக ஒவ்வொரு கடைக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமாகும் கடை வாடகைக்கு 10 சதவீதம் தண்டப்பணம் செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கடை வாடகை பதிவேட்டின் பிரகாரம் தாமதத்திற்காக தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட ஸ்தாபிக்கப்பட்டிருந்த 08 கோபுரங்களுக்குரித்தாக இலங்கை குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உயரம் 5 - 20 மீற்றர் வரை ரூபா 20,000 உம் அதிகரிக்கும் ஒவ்வொரு மீற்றருக்கும் ரூபா 100 வீதம் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும், ஒரு நிறுவனத்திடமிருந்தே கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே கோபுரங்களுக்காக வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய வியாபார வரி அறவிடப்படாதிருந்ததுடன், வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஒரு நிறுவனத்திடமிருந்தே அறவிடப்பட்டிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 873,766 ஆக இருந்துடன், கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,975,450 மாத்திரமாக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாக காணப்படும் ரூபா 167,245 ஆன ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

அளவிட முடியாத 3'4 கருங்கல், சிப்ஸ் ஆற்று மணல் குருணிக் கல் அளவொன்று விளையாட்டரங்கைச் சுற்றி குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் அம்மூலப்பொருட்களை பதிவுசெய்வதற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 மே 22 ஆந் திகதிய 5/அமை/2012/48 ஆம் இலக்க வடமேல் மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பிரதேச சபையின் தலைவரின் பிரத்தியேக செயலாளர் பதவிக்காக பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 8,000 ஆன படியொன்று அல்லது அவ்வாறு இல்லாதவருக்கு ரூபா 6,000 ஆன படி செலுத்த்பபட வேண்டிய போதிலும், சபையினால் பதவிநிலைத் தரமில்லாத ஒருவருக்கு 2013 செப்தம்பர் முதல் 2015 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்கு மாதமொன்றுக்கு ரூபா 8,000 வீதம் கொடுப்பனவு செய்தமை பேரில் ரூபா 40,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சபையின் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தராக கூடியது மாதமொன்றுக்கு ரூபா 4,000 இற்கு உட்பட செலுத்த முடியுமான போதிலும், 2014 சனவரி முதல் 2015 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 வீதம் கொடுப்பனவு செய்யப்பட்டதன் பேரில் ரூபா 16,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் 33 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வீதி மோட்டர் கிரேட் இடப்பட்டு தெலவில்ல அல்லது மதகு இட்டு அபிவிருத்தி செய்திருந்த வீதிகளின் எண்ணிக்கை 372 ஆக இருந்ததுடன், அதனுடன் 25 மதகுகள் அல்லது காண்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மொத்தமாக பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதியான ரூபா 14,452,818 தொகையிலிருந்து ரூபா 1,959,486 அதாவது மொத்த தொகையில் 13 சதவீதம் மாத்திரம நீண்டகால ஆக்கபூர்வமான நிர்மாணகாண் அல்லது மதகுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 9,199,041 தொகையொன்று வீதியை மோட்டார் கிரேட் செய்வதற்காகவும் குருணிக்கற்கள் இடுவதற்காகவும் ரூபா 3,294,291 தொகையுமாக மொத்த தொகையில் 87 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) மோட்டார் கிரேட் செய்யப்பட்ட வீதி 2015 திசெம்பர் 15 ஆந் திகதி பௌதீக ரீதியாக பரீட்சித்த போது இருந்த நிலைமைக்கு உட்பட்டிருந்ததுடன் மோட்டார் கிரேட் செய்த காரணத்தினால் காணப்பட்ட வீதி ஒடுங்கியிருந்ததால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 9,199,041 தொகை பயனற்ற செலவினமாக மாறியிருந்தது.

(இ) நேர் முறைமையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த சபையின் கராஜ் நிர்மாணத்திற்காக பதவியணியினரின் சமூகமளித்தமை எழுத்துமூல உறுதிப்படுத்தப்பட்டிருந்த 03 சந்தர்ப்பங்களின் போது பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளர்களுக்காக ரூபா 109,900 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கொடுப்பனவிற்கான பெறுனர்களின் கையொப்பத்தை ஒப்பிட்ட போது ஒரே பெயருக்கு முன்னால் சில கையொப்பங்கள் வேறுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், கொடுப்பனவுகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வதிவிட முகவரியோ, தேசிய அடையாள அட்டை இலக்கமோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நேர் முறைமை அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த இந்நிர்மாணத்திற்காக

வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொண்டு நிர்மாணிப்பதற்கு சபை அங்கீகாரமொன்றோ அல்லது குழு தீர்மானமொன்றோ காணப்படாதிருந்ததுடன், குறித்த மதிப்பீடும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாஉல்ல கிராம சேவையாளர் பிரிவின் கலுஆரச்சியாகம வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 650,000 ஆன மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 269,864 ஆன முடிவு வேலை பெறுமதியான குருணிக்கல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும், தெலவில்ல நிர்மாணிக்கப்பட்டிருந்தமை 2015 திசெம்பர் 15 ஆந் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையினால் உழைக்கப்பட்ட வருமானத்தின் கீழ் 02 வரவு விடயங்களின் கீழ் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 1,903,000 ஆக இருந்ததுடன், அறவிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 1,542,000 ஆக இருந்தருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாதிருந்ததுடன் அதன் கீழான உள்ளகக் கணக்காய்வு பிரிவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 4.2.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

ரூபா 650,000 பெறுமதியான கெப் வண்டியொன்றும் ரூபா 1,093,400 பெறுமதியான பெக்கோ இயந்திரமொன்றும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையொன்று காணப்பட்டது.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்